மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.
அ.வ.எண்.142/2019

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேசன் | தொழில் | |
| தகப்பனார் பெயர் | பையாலு | வகுப்பு | --- |
| வயது | | சமயம் | --- |
| நாள் | 25.06.2024 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.4 | | |

இன்று 25.06.2024 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை

1) நான் தற்போது மேட்டூர் நகராட்சியில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில், பிரச்சனைக்குரிய இடத்தை நேரில் சென்று ஆய்வு செய்தேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் சான்றிட்ட நகல்களுடன் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். நகராட்சி ஆணையரால் நீதிமன்றத்தில் இவ்வழக்கு தொடர்பாக சாட்சியம் அளிக்கும் பொருட்டு எனக்கு அளிக்கப்பட்ட அங்கீகார கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.1 (Ex.X1)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) நான் பிரச்சனைக்குரிய இடத்தை நேரில் சென்று பார்த்ததாக சொல்லும் நிலையில், மேற்படி இடம் வாதியின் வீட்டிற்கு மேற்கில் உள்ளது. மேற்படி பிரச்சனைக்குரிய சந்தை நான் நேரில் சென்று இன்று காலை பார்வையிட்டேன். மேற்படி சந்தில் கழிவு நீர் வெளியேறும் குழாய் அமைந்துள்ளது. மேற்படி சந்தின் வழியாக வாதி வீட்டிற்கு குடிநீர் இணைப்பு செல்கிறது. அது நகராட்சியால் வழங்கப்படவில்லை. அதற்கு முன்பு பஞ்சாயத்தால் வழங்கப்பட்டது. பின்னிட்டு மேற்படி பகுதி நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டதால், தற்போது நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது.

3) பிரச்சனைக்குரிய சந்தில் செல்லும் கழிவு நீர் குழாயை மேட்டூர் நகராட்சியால் பராமரிக்கப்படுகிறது. வாதியின் வீட்டிலிருந்து கழிவு நீர் வெளியேறுவதற்காக அமைக்கப்பட்டுள்ள குழாயை நான் பார்வையிட்டேன். தற்போது மேற்படி கழிவு நீர் குழாய் சிதிலமடைந்து காணப்படுகிறது. தற்போது மேற்படி கழிவு நீர் குழாய் வழியாக கழிவு நீர் வெளியேற இயலாது.

4) நகர சர்வே "அ" பதிவேட்டின் படி மேற்படி சந்து ரிசர்வ் ரெவின்யூ டிபார்ட்மெண்ட் பெயரில் தாக்கலாகியுள்ளது. மேற்படி சந்திற்குரிய அ பதிவேட்டின் சான்று நகலையும், புலவரைபடத்தின் சான்று நகலையும் தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அவை **சா.சா.ஆ.2 (Ex.X2) கோர்வை** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (பிரதிவாதி தரப்பில் மேற்படி ஆவணங்களின் தொடர்புடமை குறித்து ஆட்சேபிக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு சா.சா.ஆ.2 கோர்வையில் உள்ள ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது).

5) வாதியின் வீட்டிற்கு பின்புறத்தில் மேற்படி சந்தை தவிர வேறு சந்து எதுவும் இல்லை.

(பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.4 ன் குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.